

தொழிலாளர் நலன்மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சென்னை, கொண்டித்தோப்பு மற்றும் சூளை பகுதிகளில் அமைந்துள்ள இ.எஸ்.ஐ மருந்தகங்களில் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டார். உடன், இ.எஸ்.ஐ மருத்துவமனைகளின் இயக்குநர் மருத்துவர். இளங்கோ மகேஸ்வரன் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர்.

# சென்னை இ.எஸ்.ஐ. மருந்தகங்களில் ஆய்வு!

## அமைச்சர் சி.வெ.கணேசன் மேற்கொண்டார்!

சென்னை, ஜூலை 26 -
சென்னை இ.எஸ்.ஐ. மருந்தகங்களில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் திடீர் ஆய்வு செய்தார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுதுறை அமைச்சர் சி.வெ. கணேசன் 25.07.2024 காலை ஏழு மணி முதல் சென்னை, கொண்டித்தோப்பு மற்றும் சூளை பகுதிகளில் அமைந்துள்ள இ.எஸ்.ஐ. மருந்தகங்களில் திடீர் ஆய்வு செய்தார்.

இந்த மருந்தகங்களின் காப்பாளர்கள் மொத்தம் 31 ஆயிரம் நபர்கள் ஆவார்கள். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ. கணேசன், மருந்தகங்களுக்கு வருகை புரிந்த வெளி நோயாளிகளிடம் முறையான சிகிச்சை அளிக்கப்படுகிறதா? என்பது குறித்தும்,

மருத்துவர்கள் பணியாளர்கள் உரிய நேரத்தில் வருகிறார்களா? என்பது குறித்தும் ஆய்வு செய்தார். அதுமட்டுமல்லாமல், போதுமான அளவில் மருந்துகள் இருப்பில் உள்ளதா? என்பது குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டார்.

உடன் இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளின் இயக்குனர் மருத்துவர் இளங்கோ மகேஸ்வரன் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் இருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அரசு முறை பயணமாக ஆஸ்திரேலியா நாட்டிற்கு சென்றுள்ள வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (24.07.2024) மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அட்ரியன் லிட்டில் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைசெயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கீதாலட்சுமி மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர். இந்தக் கலந்துரையாடலின் போது மெல்போர்ன் பல்கலைக்கழகத்திலிருந்து தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சிக்கு, வேளாண்மையில் இயந்திர மயமாக்குதல் மற்றும் உணவு பதப்படுத்துதல் துறையில் உள்ள தொழில்நுட்பங்களை கண்டறிவது குறித்தும் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப புதிய பயிர்கள் மற்றும் பயிர் ரகங்களை அறிமுகம் செய்தல் மற்றும் இப்பல்கலைக்கழகமும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து இணையவழிக் கல்வி மாணவர்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறுவதும் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

### ஒன்றிய அரசைக் கண்டித்து – மு.தென்னவன் தலைமையில்

# சிவகங்கையில் நாளை ஆர்ப்பாட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, ஜூலை. 26
சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி ஒன்றிய அரசில் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டதை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அதன்படி சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் நாளை (27-ஆம் தேதி சனிக்கிழமை) காலை 9.00 மணி அளவில் சிவகங்கை அரண்மனைவாசல் சண்முகராஜா கலையரங்கில் முன்னாள் அமைச்சரும், மாநில இலக்கிய அணி



புரவலருமான மு.தென்னவன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்புஅணி நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் – வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி – தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் அறிவிப்பு!

கோவை, ஜூலை 26 -
கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் அறிவிப்பு.







ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச் சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை.

மாறாக, தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று,

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலு மாக புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில், மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து, நாளை (ஜூலை 27 - சனிக்கிழமை), காலை 10.00 மணியளவில், கோவை சிவானந்தா காலனி, டாடாபாத் மைதானத்தில், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி, உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், BLA2, பூத்கமிட்டி உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக, பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள், தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# நீலகிரி மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!

உதகை, ஜூலை 26 -
நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் இன்று 26.7.2024 - வெள்ளிக்கிழமை காலை 11 மணி அளவில் மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.போஜன் தலைமையில், கழக தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான கா.ராமச்சந்திரன் முன்னிலையில்



மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: 1. ஜூலை 27 சனிக்கிழமை தலைமை கழக அறிவிப்பின்படி, நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் உதகையில் ஒன்றிய பா.ஜ.க., அரசை கண்டித்து நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்குறித்து.
2. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

## சென்னை வடக்கு மாவட்ட

# பகுதிச் செயலாளர்கள் - வட்டச் செயலாளர்கள் அவசரக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்ட பகுதி செயலாளர்கள்-வட்ட செயலாளர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் **ஆர்.வெற்றிவீரன்** தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் **கலாநிதி வீராசாமி,** சட்டமன்ற உறுப்பினர்கள் **ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர்,** முன்னிலையில் இன்று 26.07.2024 காலை 9.30 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் நடைபெறும். கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்ட செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க

### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

### திருவள்ளூரில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக அவசர செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட கழகச் செயலாளர் – திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் இன்று 26-07-2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் திருவள்ளூர் சென்னை சில்க்ஸ் அருகில் உள்ள ஹோட்டல் பெரம்பூர் சீனிவாசா கூட்ட அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் கே. திராவிடபக்தன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. அதுசமயம் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி கழக விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேஷன், கழக நெசவாளர் அணி துணை தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், பா.உதயமலர்பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்ரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம் வி.கிஷோர், மு.சுப்பிரமணியம் பி.ராஜேஸ்வரிரவீந்திரநாத் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இக்கூட்டத்தில் முன்னதாக திருவள்ளூர் நகர செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்றுகிறார். மேற்கண்ட கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பாஜக மோடி அரசின் பட்ஜெட்டை கண்டித்து திருவள்ளூரில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து, கழக ஆக்க பணிகள்

**திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ.,**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை ஒட்டி, சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி, 121வது வட்டக் கழகத்தில், அவ்வை சண்முகம் சாலை அமைந்துள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் அறுசுவை வழங்கும் நிகழ்ச்சி 24.07.2024 அன்று புதன்கிழமை காலை நடைபெற்றது. வட்ட செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் மதி எம்.சி. முன்னிலையில், மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு கலந்து கொண்டு, மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்களை வழங்கி, மாணவ மாணவிகளுக்கு அறுசுவை உணவு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# பெருங்களத்தூர் வடக்குப் பகுதிக் கழக செயற்குழு கூட்டம்!

## பகுதிச் செயலாளர் டி.காமராஜ் அறிக்கை!

தாம்பரம், ஜூலை 26
பெருங்களத்தூர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் டி.காமராஜ் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து நாளை (27.7.24, சனிக்கிழமை ) காலை 9.30 மணியளவில் தாம்பரம் சண்முகம் சாலையில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வது குறித்து இன்று (26.07.2024, வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் பெருங்களத்தூர் வடக்கு பகுதிக் கழக கூட்டம், மேற்கு தாம்பரத்தில் அமைந்துள்ள கோன் கிருஷ்ணா திருமண மண்டபத்தில் பகுதி அவைத்தலைவர் டி.ஆர். கோபி எம்.சி. தலைமையில் நடைபெறுகிறது. தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

ஆகையால் இக்கூட்டத்தில் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் பகுதிக்குட்பட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், ஆரம்பாக்கம் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் முகாமில், மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றார். உடன் மு.மண்பாலன், பா.செ.குணசேகரன், எஸ்.ரமேஷ், எம்.எல்.ரவி, எஸ்.ராமஜெயம், ப.முத்துசாமி, கே.ஆறுமுகம், டி.மஸ்தான், டி.மணி, லட்சுமிநாராயணன், கே.வி.நாகராஜ், உதயகாந்தம்மாள், திருஞானம், க.பரத்குமார், கே.கதிரவன், அப்பாஸ், அங்கமுத்து, அ.மனோகரன், ரவி, வாசு, தனசேகர், சிலம்பரசன், சேகர், கே.பழனி, போண்டா சிவா, ப.பரத்குமார், ஏடூர் ஜெயா, ச.தியாகராஜன், கே.சி.ராஜா, கஜேந்திரன், இப்ராகிம் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.